CASE NO. CC 157/2025

Date 06.11.2025

பெயர் PW 1 – புஷ்பலதா க/பெ முருகன்

**(எதிரி, மனுதாரர் ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

1) கடந்த 13.12.2024 ம் தேதியன்று எதிரி எனக்கு ரூபாய் 3 லட்சத்தி 60 ஆயிரம் மொத்தம் தர வேண்டும் என சொல்லி வாட்ஸ் ஆப் மெசேஜ் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு லோன் பெற்றுத் தருவேன் என்றால் சரிதான். நான் பத்திரத்தை வைத்து லோன் பெற்றுக் கொடுப்பேன் என்றால் சரிதான். நவம்பர் 2023 ம் தேதி எதிரி என்னிடம் புரோ நோட் கொடுத்து ரூபாய் 50 ஆயிரம் கடன் வாங்கினாரா என்றால் வாங்கவில்லை.

2) ஜூன் 2023 ம் தேதி எதிரி என்னிடம் புரோ நோட் கொடுத்து ரூபாய் 2.50 இலட்சம் கடன் வாங்கினாரா என்றால் வாங்கவில்லை. மேற்படி இரண்டு தொகைகளுடன் சேர்த்து ரூபாய் 60 ஆயிரம் வட்டி செலுத்த வேண்டும் என 13.02.2024 ம் தேதி எதிரி வாட்ஸ் ஆப்-ல் மெசேஜ் அனுப்பினேன் என்றால் எதிரி மகள் திருமணத்திற்காக பணம் தேவைப்பட்டதால் எதிரி நகையை எனது பெயருக்கு அடகு வைத்துக் கொடுத்தேன் அந்த தொகையை எதிரி வட்டி கட்டாததால் மேற்படி வாட்ஸ் ஆப் மெசேஜ் அனுப்பினேன்.

3) நகை அடகு வைத்தது சம்பந்தமான விவரத்தை எனது மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வாட்ஸ் ஆப் மெசேஜில் நகைக்கான கடன் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி திருச்சி துறையூரில் உள்ள இடப் சொத்துப் பத்திரத்தைக் கொடுத்து திருப்பி வாங்கிக் கொடுத்தார் என்றால் பத்திரத்தைக் கொடுத்து லோன் கேட்டார். எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 3 லட்சத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார் என்றும் அதனால் தான் எதிரி கொடுத்த பத்திரத்தை நான் திருப்பிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல வேறு இடத்தில் கடன் வாங்கப் போவதாக கூறி திரும்ப வாங்கினார்.

4) சிவகங்கையைச் சார்ந்த நித்யா என்பவரிடம் எதிரி கொடுத்த பத்திரத்தை நான் வாங்கி வைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல வேறு ஒருவரின் பத்திரத்தை வாங்கினேன். அந்த பத்திரம் எதிரி நித்யாவிடம் கொடுத்த பத்திரம் என்பதை

SELVAM P Digitally signed by SELVAM P Date: 2025.11.06 16:58:31 +0530

தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எதிரி மேற்படி சொத்து பத்திரம் சம்பந்தமாக என் மீதும் நித்யா மீதும் புகார் கொடுத்து போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

5) போலீசார் விசாரணைக்குப் பிறகு மேற்படி பத்திரத்தை எதிரியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல பத்திரத்தின் உரிமையாளரான வனிதா என்பவரிடம் ஒப்படைத்தேன். மேற்படி பத்திரத்தை எதிரி வனிதாவிடமிருந்து வாங்கி வந்தார் என்று தெரிந்து கொண்டேன் என்றால் போலீசில் புகார் கொடுத்த பிறகு தெரிந்து கொண்டேன். நானும் நித்யாவும் நல்ல நண்பர்கள் என்பதால் எதிரி பெற்ற ரூபாய் 3 லட்சம் கடனுக்கு அதிகப்படியான வட்டி கொடுத்தால் தான் அந்த பத்திரத்தை திருப்பிக் கொடுப்பேன் என்று கூறி எதிரியிடமிருந்து பூர்த்தி செய்யப்படாதா வழக்கு காசோலையை பெற்று அதை பூர்த்தி செய்து தற்போது இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) காசோலையில் உள்ள கையெழுத்து ஆங்கிலத்திலும் பெயர் மற்றும் தொகை எழுத்துக்கள் தமிழிலில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் நான் தான் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல எதிரி தான் எழுதிக் கொடுத்தார். மேற்படி தொகை எப்படி வந்தது என்பது சம்பந்தமாக எனது புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கு உரிய காலக்கெடுவுக்குள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) நான் வழக்கில் கூறியது போல் எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதிகப்படியான வட்டி வாங்க வேண்டும் என்ற கெட்ட நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.11.06 16:58:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

சிவகங்கை.